**O.S. No. 294 /2021**

**Date:07.04.2026**

**பி வா.சா.1 வேலம்மாள்**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு படிக்க தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்தது எனது மூத்த மகன் ஆவார். எனது மகன் எதற்காக வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சொத்தில் பங்கு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். 2ம் பிரதிவாதி கைலாசம் எனது மகன். மற்றும் கதிரேசன் என்பவரும் எனது மகன் ஆவார். கண்ணன், என்ற இன்னொரு மகன் இருந்தார். அவருக்கு திருமணமாகி குழந்தைகள் இல்லாமல் இறந்துவிட்டார். மேற்படியார் இறந்து 15 வருடங்கள் இருக்கும். கண்ணன் மனைவி பெயர் பிரமு. பிரமு என்பவர் என்னுடன் இல்லை. பிரமு என்னிடம் சொத்து வேண்டும் என்று கேட்டாரா என்றால் அவரது பாகத்திற்காக ரூ.4 லட்சம் நேரடியாக கொடுக்கப்பட்டது மற்றும் ஏற்கனவே தனியாக ரூ.2 லட்சம் எனது மகன் கண்ணன் பெயரில் உள்ள வங்கி கணக்கில் இருந்து பெற்றுக்கொண்டார். மேற்கண்ட சங்கதிகளை குறித்து நான் எனது எதிர் வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மொத்தம் எங்களுக்கு 4 சொத்துக்கள் உள்ளது. பிராது 1, 2 அயிட்ட சொத்துக்கள் எனது கணவர் சண்முக சுந்தரம் பெயரில் உள்ளது. பிராது 3ம்அயிட்ட சொத்து எனது பெயரிலும், எனது கணவர் பெயரிலும் உள்ளது. பிராது 4ம் அயிட்ட சொத்து எனது மாமனார் பெயரில் உள்ளது எங்கள் பாகத்திற்கு இன்னும் வரவில்லை அதை நாங்கள் தான் அனுபவம் செய்து கொண்டு வருகிறோம். பி.வா.சா.ஆ.3 ஆவணம் பாக பாத்திய விடுதலை என் மகன் கண்ணனின் மனைவி பிரமு என்பவர் குடும்ப சொத்துக்களைப் பொருத்து ரூ.2 லட்சம் பெற்றுக்கொண்டு 1/5ல் பாகத்தை பொருத்து பதிவு பாக பாத்தியம் மூலம் விடுதலை கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் 4ம் அயிட்ட சொத்து எனது மாமனார் கைலாச முதலியாருக்கு பாத்தியப்பட்டிருந்தது, கைலாச முதலியார் பெண் வாரிசுகளான பழனியம்மாள், வள்ளியம்மாள், ராசம்மாள், எனது

கணவர் சண்முக சுந்தரத்திற்கு வாரிசு முறையில் பாத்தியப்பட்டு அவர்களுக்கிடையே ஏற்பட்ட பாகப் பிரிவினையில்பிராது 4ம் அயிட்ட சொத்த எனது கணவர் சண்முக சுந்தரத்திற்கு கிடைக்கப்பெற்றது. அதன் பின்னர் பிராது சொத்துக்களில் 1/4ல் பாகத்தை நானும், இந்த வாதியான செந்தில்குமாரும் மற்றும் 2,3 பிரதிவாதிகளும் சேர்ந்து அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரிதான். எனது கணவர் 2001ல் இறந்தார். 4ம் பிரதிவாதி எனது மகன் 2ம் பிரதிவாதியான கைலாசத்தின் மகன் என்றால் சரிதான். வா.சா.ஆ. 2 ஆவணம் 31.08.2009ல் நான் பிராது 4ம் அயிட்ட சொத்தைப் பொருத்து பதிவு தான செட்டில்மெண்டு எனது 3 மகன்களுக்கு கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். பிராது 4ம் அயிட்ட சொத்தில் இந்த வாதி மற்றும் 2, 3 பிரதிவாதிகளுக்கு தான செட்டில்மெண்டு எழுதி கொடுத்துவிட்டேன். மேற்படி வாதியான செந்தில்குமாருக்கு 1/3ல் ஒரு பங்கு உண்டு என்றால் சரிதான். மேற்படி பிராது அனைத்து சொத்துக்களிலும் 1/3ல் பங்கு உண்டு என்றால் சரிதான். வா.சா.ஆ. 3 ல் 30.6.2021ம் தேதியில் பிராது 1 முதல் 3 சொத்துக்களில் நானும், கைலாசமும் சேர்ந்து கைலாசத்தின் மகன் லட்சுமணன் ராஜாவுக்கு எழுதிக்கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் சட்டப்படி நான் எழுதிக்கொடுக்க முடியாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் வாய் மொழியாக பாகம் பிரித்துள்ளோம் என்று சொல்லியுள்ளேன் எப்போது என்று கேட்டால் 7 –8 வருடங்களுக்கு முன்பாக வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டோம். மேற்கண்டவாறு நாங்கள் வாய்மொழியாக பாகம் பிரிக்கவில்லை என்றால் சரியல்ல. அதேபோல் வா.சா.ஆ. 4 ஆவணம் 01.07.2021ம் தேதியில் நானும், கைலாசமும் சேர்ந்து 3ம் பிரதிவாதியான கதிரேசன் என்பவருக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட பத்திரம் மோசடியானது என்றால் சரியல்ல. எனது மகன் செந்தில்குமாருக்கு குழந்தை கிடையாது. பிராது சொத்துக்கள் அனைத்திலும் செந்தில்குமாருக்கு 1/3ல் பங்கு உண்டு என்றால் சரிதான். எனது மூத்த மகன் செந்தில்குமாருக்கு குழந்தை இல்லை என்பதால் அவருக்கு சொத்து கொடுக்கக்கூடாது என்பதற்காக அவருக்கு தெரியாமல்

வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ. 4 ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. பிராது 4ம் அயிட்ட சொத்தில் 16 தறிகள் போட்டு ஓட்டிவந்தார்கள் என்றால் சரிதான். மேற்கண்ட தறிசெட்டில் இருந்து வந்த வருமானத்தை எனது மூத்த மகனுக்கு இன்று வரை கொடுத்தது இல்லை. போன மாதம் மட்டும் எனக்கு ரூ.5000/–கொடுத்தார் என்றால் இந்த வழக்கில் சொல்வதற்காக கொடுத்தார். சென்னையில் சென்று நான் வாதியுடன் இருந்தேனா என்றால் இல்லை. பிராது 4ம் அயிட்ட சொத்தில் உள்ள தறிசெட்டு தற்போது ஓடுகிறதா என்றால் 4 தறிகள் மட்டும் ஓடுகிறது. 30.06.2021, 10.07.2021 ஆகிய தேதிகளில் வாதிக்கு தெரியாமல் வாதியை ஏமாற்ற வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் நான் மோசடியாக வா.சா.ஆ 3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணத்தை ஏற்படுத்தினோம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் பிராது சொத்துக்களில் வாதிக்கு பங்கு இல்லை என்று சொல்லியுள்ளது பொய்யான சங்கதிகள் என்றால் வாதிக்கு பங்கு உள்ளது. வாதிக்கு எந்தவிதமான பங்கு பாத்தியமும் எழுதி கொடுக்கவில்லை என்றாலும் பிராது சொத்துக்களில் வாதி பங்கு கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. பிராது 1 முதல் 3 அயிட்ட சொத்துக்களில் 1/4 ல் பாகமும், 4ம் அயிட்டசொத்தில் வாதிக்கு 1/3 ல் பாகமும் கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரிதான். ஆகவே, பிராதுப்படி வாதிக்கு சொத்தை பிரித்துக்கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/–P.Mahindra Varma,
Subordinate Judge,
Sankarankovil